# 7.61 - (ஆலந்தான் உகந்து)

(சுந்தரர்)

திருமுறை.பதிகம் 7.61 (# 7848 - 7858)

**தலம்**: திருக்கச்சி ஏகம்பம் **(இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது)**

**சுவாமி**: ஏகாம்பர நாதர்

**அம்பிகை**: காமாட்சி அம்மை (ஏலவார்குழலி)

**வரலாறு:**

திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள், சங்கிலி நாச்சியார்க்கு அளித்த உறுதிமொழியை மீறினமையால் இரண்டு கண்களையும் இழந்தார். பல தலங்களுக்குச் சென்று பணிந்து காஞ்சிபுரம் வந்தார். அங்கே திருவேகம்பமுடையானை வணங்கி வேண்டியபோது அப்பெருமான் திருவருளால் இடக்கண் பார்வை மாத்திரம் கிடைக்க, உடனே இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

====================

624

**ஆலந் தானுகந் தமுதுசெய் தானை**
**ஆதி யைஅம ரர்தொழு தேத்துஞ்**
**சீலந் தான்பெரி தும்முடை யானைச்**
**சிந்திப் பாரவர் சிந்தையு ளானை**
**ஏல வார்குழ லாள்உமை நங்கை**
**என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற**
**கால காலனைக் கம்பனெம் மானைக்**
**காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.1**

1)

இத்திருப்பதிகம் தமக்குக் கண் அளித்த இறைவரது திருவருளை வியந்து அருளிச் செய்தது.

நஞ்சினைத் தான் விரும்பி உண்டு அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்தவனும், யாவர்க்கும் முதல்வனும், தேவர்கள் வணங்கித் துதிக்கின்ற பெருமையை உடையவனும், தன்னை நினைவாரது நினைவில் விளங்குபவனும், மயிர்ச்சாந்து அணிந்த நீண்ட கூந்தலை உடையவளாகிய 'உமை' என்னும் நங்கை தான் எந்நாளும் துதித்து வழிபடுதலைப் பெற்றமைக்கு முதல்வனும், கால காலனும் ஆகிய திருவேகம்பத்தில் உள்ள எம் பெருமானைக் காணுதற்கு அடியேன் கண் பெற்றவாறு வியப்பு!

திருவேகம்பத்தில் உள்ள உமையம்மைக்கு 'ஏலவார் குழலி' எனப் பெயர் வழங்கப்படுகிறது. காமாட்சியம்மன் கோயில் தனியாக உள்ளது.

==========================================

625
உற்ற வர்க்குத வும்பெரு மானை
    ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
    பாவிப் பார்மனம் பரவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள்உமை நங்கை
    ஆத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.2

2)
தன்னைப் புகலிடமாகத் தேடி வந்தவர்க்கு நன்மை செய்கின்ற பெருமானும், ஊர்தி எருதாகிய ஒன்றை உடையவனும், தேவர்கட்குத் தலைவனும், தன்னைச் சார்ந்தவர்க்குப் பெரிய பற்றுக்கோடாய், தன்னை நினைப்பவரது மனத்தில் தங்கியிருப்பவனும் ஆகிய, உமை விரும்பி வழிபடப் பெற்ற, நீண்ட சடையினை உடைய திருவேகம்பத்தில் உள்ள எம் பெருமானைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது ஒரு வியப்பாகும்.

================================================
626
திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச்
    செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
    காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை
    மருவி யேத்தி வழிபடப் பெற்ற
*பெரிய கம்பனை எங்கள்பி ரானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.3

*காமாட்சியம்மையால் பூசிக்கப்பட்ட ஏகாம்பர நாதரே பெரியகம்பர்.

3)
வானத்தில் திரிகிற முப்புரங்கள் தீப்பிழம்பாய் எரிந்து ஒழியுமாறு செய்து, அப்போது திருமாலாகிய விடையின்மேல் விளங்கியவனும், யானையின் தோலைப் போர்த்தவனும், மன்மதனை எரிக்க நெற்றிக்கண்ணைத் திறந்தவனும், வளைகளை அணிந்த உமை என்னும் நங்கை அணுகி நின்று துதித்து வழிபடப் பெற்ற பெரியோனும் ஆகிய, திருவேகம்பத்தில் உள்ள பெருமானைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது வியப்பு.

பெரிய கம்பன் = ஏகாம்பர நாதர்.

================================================

627
குண்ட லந்திகழ் காதுடை யானைக்
    கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் புமலர்க் கொன்றையி னானை
    வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
    கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.4

4)
காதில் குண்டலத்தை உடையவனும், கூற்றுவனை உதைத்துக் கொன்றவனும், கொன்றை மாலையை அணிந்தவனும், சடையில் பாம்பையும் பிறையையும் வைத்துள்ளவனும், உமை அணுகி நின்று துதித்து வழிபடப்பட்டவனும், திருநீலகண்டனும் ஆகிய, திருவேகம்பத்தில் உள்ள எம் இறைவனைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது வியப்பாகும்.

=============================================
628
வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
    வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
    அரும றையவை அங்கம்வல் லானை
எல்லை யிற்புக ழாள்உமை நங்கை
    என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
*நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.5

*உருத்திரராற் பூசிக்கப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்கு நல்லகம்பனென்று பெயர்.

5)
வெல்லும் தன்மையுடைய வெண்மையான மழுவை உடையவனும், கடலில் தோன்றிய விடத்தை உண்ட ஆற்றல் உடையவனும், அடியார்களின் துன்பங்களைப் போக்கி அவர்களுக்கு அருள் செய்பவனும், அரிய வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் செய்ய வல்லவனும் ஆகிய, அளவற்ற புகழுடைய உமை எந்நாளும் துதித்து வழிபடப் பெற்ற, திருவேகம்பத்தில் உள்ள எங்கள் தலைவனைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது பெரும் வியப்பாகும். ந்ன்மையுடைமை பற்றியே இறைவன் 'சிவன்' என்று அழைக்கப்படுகிறார்.

நல்ல கம்பன் = உருத்திரரால் பூசிக்கப் பெற்ற மூர்த்தி.
=============================================

629
திங்கள் தங்கிய சடையுடை யானைத்
    தேவ தேவனைச் செழுங்கடல் வளருஞ்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
    சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
    மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.6

6)
சடையில் பிறைச்சந்திரனைச் சூடியவனும், தேவர்க்குத் தேவனும், காதில் சங்குக்குழையை உடையவனும், சாம வேதத்தைப் பெரிதும் விரும்புகின்றவனுமாகிய, என்றும் மங்கைப் பருவம் உடைய நங்கையாகிய மலைமகள் தவத்தால் கண்டு அணுகி, துதித்து வழிபடப் பெற்ற, கங்கையை அணிந்து திருவேகம்பத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது வியப்பாகும்.

==============================================
630
விண்ண வர்தொழு தேத்தநின் றானை
    வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
    நாளும் நாம்உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
    என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.7

7)
தேவர்கள் தொழ நின்றவனும், வேதங்களை விரித்துச் செய்ய வல்லவனும், தன்னை அடைந்தவர்கட்கு எந்நாளும் நலத்தையே செய்பவனும், நாள்தோறும் நாம் விரும்புகிற தலைவனும் ஆகிய, புகழ் வாய்ந்த 'உமை' என்னும் நங்கை எந்நாளும் துதித்து வழிபடப் பெற்ற, கண்களும் மூன்றுடைய, திருவேகம்பத்தில் உள்ள எம்பெருமானைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது வியப்பாகும்.

==============================================
631
சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
    சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
    பாலோ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
    ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.8

8)
நாள் தவறாமல் தியானித்தும் நினைத்துக்கொண்டும் காலையில் எழுபவர்களுடைய மனத்தில் விளங்கும் சிவபெருமானும், என்னைக் கட்டுப்படுத்திய பழவினைகளின் தொடர்பை வேரோடு ஒழிப்பவனும், பால், தயிர், நெய் முதலிய பசுவின் பொருள்கள் ஐந்திலும் முழுகுவதில் மகிழ்பவனும், முடிவில்லாத புகழ் உடையவளாகிய உமா தேவியாரால் அன்போடு வணங்கப் பெற்ற, மணமுடைய நீண்ட திருச்சடையை உடைய திருவேகம்பனுமாகிய எம்பெருமானைக் காணும் பொருட்டு (இடக்கண்) பார்வையை அடியேன் பெற்ற விதத்தை என்னவென்று சொல்வது!

=================================================
632
வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
    வாலி யபுரம் மூன்றெரித் தானை
நிரம்பி யதக்கன் றன்பெரு வேள்வி
    நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை
    பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.9

9)
தவத்தின் பயனாகிய வரங்களைப் பெற்றமையால் வனத்தில் உலாவும் ஆற்றலைப் பெற்ற கொடிய அசுரர்களது வலிய அரண்கள் மூன்றை எரித்தவனும், தேவர்கள் நிரம்பிய தக்கனது பெருவேள்வியை அழித்த வீரம் உடையவனும் ஆகிய, பரவிய புகழை உடைய உமாதேவி என்னும் நங்கை முன்னிலையாகவும் படர்க்கையாகவும் துதித்து வழிபடப்பெற்ற, எட்டுக் கைகளை உடைய திருவேகம்பப் பெருமானைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது ஒரு வியப்பாகும்.

=================================================
633
எள்க லின்றி இமையவர் கோனை
    ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
    வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
    வெருவி ஓடித் தழுவவெளிப் பட்ட
*கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
    காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7.61.10

*திருமாலாற் பூசிக்கப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்கு கள்ளக்கம்பனென்று பெயர்.

10)

தேவர் பெருமானாகிய சிவபெருமானை அவனது ஒரு கூறாகிய உமாதேவி தானே தான் வழிபட வேண்டுவது இல்லை என்று இகழாமல் வழிபட விரும்பி, ஏனை வழிபாடு செய்வாருள் ஒருத்தி போலவே நின்று, முன்னர் உள்ளத்துள்ளே நினைந்து செய்யும் வழிபாட்டினை முடித்து, பின்பு புறத்தே வழிபடச் சென்று, அவ்வழிபாட்டில் தலைப்பட்டு நின்ற முறைமையைக் கண்டு, தான் அவ்விடத்துக் கம்பையாற்றின்கண் பெருவெள்ளத்தைத் தோற்றுவித்து வெருட்ட, வஞ்சிக்கொடி போல்பவளாகிய அவள் அஞ்சி ஓடித் தன்னைத் தழுவிக்கொள்ள, அதன் பின் அவள்முன் வெளிப்பட்டு நின்ற கள்வனாகிய திருவேகம்பமுடையானைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது ஒரு வியப்பாகும்.

இதன் விரிவைத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள்ளும் காஞ்சிப் புராணத்துள்ளும் காண்க.

================================================
634
**பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்**
**பெரிய எம்பெரு மானென்றெப் போதுங்**
**கற்ற வர்பர வப்படு வானைக்**
**காணக் கண்அடி யேன்பெற்ற தென்று**
**கொற்ற வன்கம்பன் கூத்தனெம் மானைக்**
**குளிர்பொ ழிற்றிரு நாவலா ரூரன்**
**நற்ற மிழ்இவை ஈரைந்தும் வல்லார்**
**நன்னெ றிஉல கெய்துவர் தாமே. 7.61.11**

11)
ஆனேற்றை விரும்பி ஏற வல்லவனும், மெய்ந்நூல்களைக் கற்றவர்களால் 'இவன் எம் பெரிய பெருமான்' என்று எப்போதும் மறவாது துதிக்கப்படுபவனும், யாவர்க்கும் தலைவனும், கூத்தாடுதலை உடையவனும் ஆகிய திருவேகம்பமுடையானைக் காண்பதற்கு அடியேன் கண் பெற்றது வியப்பாகும் என்று குளிர்ந்த சோலைகளை உடைய திருநாவலூரனாகிய நம்பியாரூரன் சொல்லிப் பாடிய நல்ல தமிழ்ப் பாடல்களாகிய இவை பத்தையும் பாட வல்லவர் நன்னெறியால் பெறும் உலகத்தைத் திண்ணமாக அடைவர்.

நன்னெறி, ஞான நெறி. அதனால் பெறும் உலகம் சிவலோகம்.

================================================
**திருச்சிற்றம்பலம்**